# காணொளி குறைதீர் கூட்டம்

## கரூர் மாவட்டம்

**திங்கள் கிழமைகளில் நடைபெறும் காணொளி குறைதீர் கூட்டத்தில் பொதுமக்கள் இணைவதற்கான வழிமுறையை இங்கே காண்போம்.**

### Bharat VC செயலி பதிவிறக்கம்

**கைபேசி செயலி இணைப்பு:**
**https://play.google.com/store/apps/details?id=com.vconsol.meity**

**அல்லது கீழே உள்ள QR குறியீடை ஸ்கேன் செய்யவும்**

**நீங்கள் உங்கள் அலைபேசியில் இந்த செயலியை நிறுவியவுடன் கீழே உள்ளவாறு ஒரு ஐகான்-ஐ உங்கள் அலைபேசியில் காண்பீர்கள். அதை திறக்கவும்.**




**செயலியை திறந்தவுடன் கீழே உள்ளவாறு உங்கள் திரையில் தோன்றும். அதில் "Join Conference" என்பதை தெரிவு செய்யவும்.**




**பின் கீழ்க்கண்டவாறு வரும் திரையில் கூட்டம் எண் , உங்கள் பெயர் மற்றும் கடவுச்சொல் அளித்து "Join" என்பதின் வாயிலாக உள்நுழையவும்.**




**கூட்டம் எண் மற்றும் கடவுச்சொல் விவரங்களை கரூர் மாவட்ட இணையத்தளத்தில் காணவும். https://karur.nic.in/ அல்லது https://karur.nic.in/ta/**

குறிப்பு:

**இணைப்பு திங்கள் கிழமைகளில் காலை 10.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மட்டுமே செயல்படும். குறைதீர் கூட்டம் காலை 11 மணி முதல் மதியம் 2 மணி வரை இருக்கும்.**

**நீங்கள் உங்களுக்கான வாய்ப்பைப் பெற்று கூட்டத்தில் உரையாடும்போது உங்களின் அலைபேசியை Portrait நோக்குநிலை தவிர்த்து Landscape நோக்குநிலையில் வைத்துக்கொள்வது சிறப்பு.**




விதிமுறைகள்

1. குறிப்பிடப்பட்ட நேரத்திற்குள் மட்டுமே குறைதீர்வு கூட்டம் நடைபெறும்.
2. மின் இணைப்பு பிரச்சனை, இணைப்பு முறிதல் அல்லது கைபேசியின் சமிக்ஞை போன்ற இதர தொழில்நுட்ப கோளாறுகளுக்கு மாவட்ட நிர்வாகம் பொறுப்பேற்காது.
3. அரசு அலுவலகத்திற்குரிய அனைத்து விதி முறைகளும் பின்பற்றப்பட வேண்டும்.
4. பொதுமக்கள் தாங்கள் இக்கூட்டத்தில் இணைந்த வரிசைப்படி மட்டுமே வாய்ப்பு வழங்கப்படும். தயவுசெய்து தங்களுக்கான வாய்ப்பு வரும்வரை காத்திருக்கவும்.

******